நோக்கிச் செல்லும் அனைத்து இலகு ரக வாகனங்கள், கன ரக வாகனங்கள், மேம்பாலத்தின் சேவை சாலையைப் பயன்படுத்துகிற வாகனங்களின் எண்ணிக்கை தற்போது மிகவும் குறைவாகவே இருக்கிறது. எனவே, சேவை சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவையில்லை என்பது அரசினுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 4 வழிச்சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, அந்தப் பணிகளை இன்னும் விரைந்து செய்வதற்கு, அதற்கு முன்னுரிமை அளித்து, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) திருக்கோயில்கள், மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருக்கோயில்களில் மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா அவர்களும், திரு. A.P. நந்தகுமார் அவர்களும் பேரவை விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்து ஒருவர் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மொட்டைக்கு இனி இல்லை கட்டணம்' என்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அற்புதமான திட்டம், பக்தகோடிகள் மற்றும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. ஏற்கெனவே, திருக்கோயில்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மொட்டையடிக்கும் பணியாளர்களின் வாழ்வாதாரம் அதிகளவு பாதிக்கப்படுவதாக ஊடகங்களிலேயும், மொட்டையடிக்கும் பணியாளர்களிடையேயும் பேசப்படுகிறது. இலவசம் என்பதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது உண்மையா? அப்படி பாதிக்கப்படுபவர்களுக்கு தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்களின் அரசு உரிய நிவாரணம் வழங்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மொட்டைக்கு இனி இல்லை, கட்டணம்' என்ற அறிவிப்பைத் தொடர்ந்து இன்றைக்கு பக்தகோடிகளின் உள்ளமெல்லாம், நெஞ்சமெல்லாம் பூத்துக் குலுங்குவதை யாரும் அறியாமல் இருக்க மாட்டார்கள். ஆனால், மொட்டை அடிப்பதைக்கூட ஒரு சில அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்வதையும் ஊடகங்களில் பார்த்திருக்கின்றோம். இறையன்பு கொண்ட நெஞ்சங்களுக்கு, மொட்டையடிப்பதற்கு பல இடங்களில் ரூ.500/–, ரூ.1,000/– என்று கேட்கின்ற நிலையிருக்கிறது. பக்தர்கள் தங்களுடைய வேண்டுதல் நிறைவேறிய பிறகு, ஆண்டவனுக்குத் தங்களுடைய உயிரைக் கொடுப்பதுபோல, தாங்கள் பிரியப்பட்டு வளர்த்த முடியைக் காணிக்கையாகச் செலுத்துவது வழக்கம். இப்படி, ஏழையெளியோர்கூட அதிகளவு வேண்டுதலை, பிரார்த்தனையை நிறைவேற்றுகின்ற சூழலை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருப்போம் இதையறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட துறையின் ஆய்வுக் கூட்டத்தில், 'இனி மொட்டைக்கு இல்லை, கட்டணம்' என்ற அறிவிப்பை வெளியிடச் செய்தார்கள். அதோடு மட்டுமல்லாமல், மொட்டையடிப்பவர்களுக்குப் பணி நிரந்தரம் என்பது எதுவுமில்லை. அவர்களுக்குத் திருக்கோயிலின் சார்பிலே எந்தவிதமான ஊதியமும் வழங்கப்படுவதில்லை. மொட்டையடிப்பவர்களுக்கு 5 ரூபாய் முதல் 25 ரூபாய் வரையில் ரசீதுபோல் தந்து, அதைத் திருக்கோயில்களில் அவர்களுக்குப் பணமாக வழங்குவது வழக்கம். பல திருக்கோயில்களில் அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லையென்பதால், 5 ரூபாயிலிருந்து 25 ரூபாய் என்பதை மாற்றி, யார் மொட்டையடித்தாலும் அதற்குண்டான கட்டணமாக 30 ரூபாயை திருக்கோயிலின் சார்பிலே செலுத்தச் சொன்னார்கள். நேற்றைக்கு முன்தினத்திலிருந்து திருக்கோயிலின் சார்பிலே 30 ரூபாயும் செலுத்தப்பட்டு வருகின்றது. அதுவும் எங்களுக்குப் போதவில்லை, ஏற்கெனவே நாங்கள் இனாமாக 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருந்தோம். இப்பொழுது அதுவும் தடைப்பட்டுவிட்டது என்பதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், நாங்களும் இன்றைக்கு இந்தக் கேள்வி வருவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலே, முதலமைச்சர் அவர்களோடு*

[திரு. பி.கே. சேகர்பாபு] [2021 செப்டம்பர் 7

இதுகுறித்து கலந்து ஆலோசித்தோம். 'கேளாமல் கொடுக்கின்ற மனது, கேட்டதெல்லாம் தருகின்ற குணம்' கொண்டவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மக்கள் பணி என்பது, இறை பணியில் உள்ள பக்தர்களுக்கு மாத்திரமல்ல, மகேசன் சேவையில் மகுடம் பதித்திருக்கின்றவர் எங்கள் முதலமைச்சர் அவர்கள். 1,749 மொட்டையடிப்பவர்கள் அந்தந்தக் கோயில்களின் அடையாள அட்டையைப் பெற்று மொட்டையடிக்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாராள மனதுடன் மாதம் 5,000 ரூபாயை ஊக்கத் தொகையாக அறிவித்திருக்கின்ற முதலமைச்சர், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கெல்லாம் அபயக் குரல் கேட்கின்றதோ, அங்கெல்லாம் தன்னுடைய ஆதரவு கரம் நீட்டி, அந்த அபயக் குரலுக்கு விடை காணுகின்ற முதலமைச்சரைப் பெற்றிருக்கின்ற தமிழ்நாடும், இந்து சமய அறநிலையத் துறையும் பெருமைகொள்கிறது. நன்றி.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.